*11*

# “பவுலின் இலாப நஷ்டக் கணக்கு”

## (பிலிப்பியர் 3:4-11)

*பல வியாபார நிருவனங்கள் காலமுறைப்படியான இலாப - நஷ்டக் கணக்குகளை வெளியிடுகின்றன: ஒரு நிறுவனம் பணம் ஈட்டியுள்ளதா இல்லையா என்று காண்பிக்க, இலாபங்கள் மற்றும் நஷ்டங்கள் ஆகியவை பட்டியலிடப்படுகின்றன. எது முக்கியமானது மற்றும் எது முக்கியமற்றது என்பவற்றை ஒப்பிடுவதற்கு, யூத ரபீக்கள் இவ்வகையான கணக்கியல் சொற்றொடரைப் பயன்படுத்தினர். இயேசு தமது புகழ்பெற்ற வார்த்தைகளில் இதேவகையான அணுகுமுறையைப் பயன்படுத்தினார்: ‘‘மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?” (மத்தேயு 16:26அ). நமது வேதபாடப்பகுதியில், பவுல் தமது சொந்த இலாப - நஷ்ட கணக்கை உள்ளடக்கினார்:*

> ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் (வசனங்கள் 7, 8).

TEV வேதாகமத்தில் “நான் எதையெல்லாம் *இலாபம்* என்று எண்ணலாகுமோ அதையெல்லாம் கிறிஸ்துவினிமித்தம் *நஷ்டம்* என்று இப்போது கணக்கிடுகிறேன்” என்றுள்ளது (வசனம் 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நாம் இந்தப் பாடத்தைப் படிக்கையில், பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது எது மற்றும் அவருக்கு முக்கியமற்றதாக இருந்தது எது என்பவற்றைக் காண்போம். நம்மில் ஒவ்வொருவரும், “எனக்கு உண்மையிலேயே முக்கியமாக இருப்பது எது?” என்று கேட்டுக்கொள்ளும்படி அறைகூவல் விடுக்கப்படுவோம்.

### ஒருவர் தமது ஆவிக்குரிய மரபுரிமைமீது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:4, 5அ, 7)

3ம் அதிகாரத்தின் முதல் பாகத்தில் பவுல், புறஜாதியார் விருத்தசேதனம் செய்துகொண்டு நியாயப்பிரமாணத்தின் மற்ற ஒழுங்கு முறைமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வாதிட்ட யூதத்துவக் கிறிஸ்தவர்களான, கிறிஸ்தவ யூதர்களைப் பற்றிக் கூறக் குத்தலான விஷயங்களைக் கொண்டிருந்தார்.

இந்தக் கள்ளப்போதகர்களைப் பவுல், “நாய்கள்,” “பொல்லாத வேலையாட்கள்” மற்றும் “சுன்னத்துக்காரர்கள்” என்று அழைத்தார் (வசனம் 2) நான் அதைச் செய்திருந்தால், “உங்களுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? நீங்கள் ஒருக்காலும் ஒரு யூதராக இருந்ததில்லையே!” என்று அறைகூவல் விடப்பட்டிருப்பேன். பவுல் தாம் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாரே, அதைப்பற்றி தாம் *அறிந்து இருந்ததை* நிரூபிக்கத் தொடர்ந்து செயல்பட்டார் - ஏனென்றால், ஒருகாலத்தில் அவர் நியாயப்பிரமாணத்தைக் கண்டிப்பாகப் பின்பற்றிய ஒரு யூதராக இருந்திருந்தார்.

“மெய்யான விருத்தசேதனமுடையவர்கள் [கிறிஸ்தவர்கள்] ... மாம்சத்தின்மீது நம்பிக்கை வைப்பதில்லை” என்று கூறியபின்பு (வசனம் 3), பவுல் “மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் [இதையே யூதத்துவத்தைப் போதித்தவர்கள் செய்தனர்] நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்” என்று கூடுதலாகக் கூறினார் (வசனம் 4). அவர் தமக்கும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலின் அவசியத்தைப் போதித்தவர்களுக்கும் இடையில் ஒரு ஒப்பீட்டைக் கோரினார். பின்தொடரும் வசனங்கள் “பழங்காலம் நமக்குச் சாசனமாக எழுதிவைத்துள்ளவற்றிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க அறிக்கைகளில் ஒன்று” என்று அழைக்கப்பட்டுள்ளது.[1]

## ஒரு பழைய கருத்துநோக்கு

பவுல் முதலில் ஒரு யூதர் என்ற வகையில் தமது வாழ்வைப் பற்றிப் பேசினார். அவர் தமது தகுதிகளை, தாம் “அவற்றை உணர்வுடன் எண்ணியது போன்ற வகையிலும் மற்றும் தமது கைகளின் விரல்களின் மீது அவற்றை சுட்டிக்காண்பித்தது போன்றும்” பட்டியலிட்டார்.[2] இதைப் பின்வரும் விபரத்தைக் கொண்டு அவர் தொடங்கினார்: “நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்” (வசனம் 5அ). செயல்விளைவில் அவர், “நீங்கள் விருத்தசேதனம் பற்றிப் பேச விரும்புகிறீர்களா? நியாயப்பிரமாணம் கட்டளையிட்டுள்ளபடி *நான்* எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பெற்றவன்” என்று கூறினார்.

விருத்தசேதனம் என்பது தேவனுக்கும் ஆபிரகாமின் சந்ததியார்களுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவின் அடையாளமாக இருந்தது. யூத ஆண்பிள்ளைகள் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது (ஆதியாகமம் 17:12; லேவியராகமம் 12:3; காண்க லூக்கா 1:59; 2:21). எனவே பவுல், தாம் ஒரு யூதராகப் *பிறந்ததைப்* பற்றிக் கூறியதன் மூலம் [இந்த விவாதத்தை] தொடங்கினார். அவர் தமது வாழ்வில் பிற்பகுதியில் யூதத்துவத்தைத் தழுவிக்கொண்ட ஒரு யூதமார்க்கத்து அமைந்தவராக இருக்கவில்லை.

அடுத்ததாக அவர், தாம் “இஸ்ரவேல் வம்சத்தான்” என்று கூறினார் (வசனம் 5ஆ). “இஸ்ரவேல்” என்பது, யாக்கோபு ஒரு இரவு முழுவதும் ஒரு தூதனோடு போராடிய பின்பு அவருக்குத் தரப்பட்ட பெயராக இருந்தது (ஆதியாகமம் 32:28). அது யூதர்களுக்குப் புனிதத்துவமான குறிப்புப் பெயரானது, அது கர்த்தருடன் அவர்களுக்கிருந்த விசேஷித்த உறவைச் சுட்டிக்காண்பித்தது. இவ்வாறாகப் பவுல், யூத இனத்தின் பாகமாக இருந்ததில் தாம் கொண்டிருந்த

பெருமையை விளக்கப்படுத்தினார்.

பவுல், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களில் தாம் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதைக்கூட அறிந்திருந்தார். அவரது நாட்களில், கோத்திர அடையாளத்துவங்கள் பெரும்பான்மையான யூதர்களுக்குத் தெளிவற்றவையாக இருந்தன, *ஆனால் இந்த அப்போஸ்தலர், தாம் "பென்யமீன் கோத்திரத்தான்"* என்பதை *அறிந்திருந்தார் (வசனம் 5இ).* பென்யமீன் கோத்திரம் ஒரு பெரிய கோத்திரமாக இருக்கவில்லை (காண்க சங்கீதம் 68:27; NIV வேதாகமத்தில் "பென்யமீனின் சிறிய கோத்திரம்" என்றுள்ளது), ஆனால் அது யூதர்களின் வரலாற்றில் தன்னைத் தனித்துவப்படுத்தி இருந்தது. இஸ்ரவேலின் முதல் அரசர் பென்யமீன் கோத்திரத்தில் இருந்து வந்தவராக இருந்தார் (1 சாமுவேல் 9:1, 2, 21; 10:1, 20-25), இஸ்ரவேல் இராஜ்யம் பிரிந்தபோது, பென்யமீன் கோத்திரத்தார் தாவீதின் வீட்டிற்கு விசுவாசமானவர்களாக நிலைத்து நின்றனர் (1 இராஜாக்கள் 12:21).[3]

*பவுல், தாம் "எபிரெயரில் பிறந்த எபிரெயன்" என்று கூறியதன் மூலம் தொகுத்துரைத்தார் (வசனம் 5ஈ).* இந்தச் சொற்றொடராக்கம், பவுலைப்பற்றிய பல்வேறு விஷயங்களைக் கூறுகிறது. இது, அவர் எபிரெயப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர் என்று சுட்டிக்காண்பிக்கிறது - ஆனால் இதைக் காட்டிலும் அதிகமானவற்றையும் இது கூறுகிறது. உதாரணமாக, அவரது இல்லத்தில் எபிரெய மொழி பேசப்பட்டு இருக்கலாம். வேதவசனங்களில், "எபிரெயன்" என்ற சொற்றொடர், யூதமக்களால் பேசப்பட்ட பழங்கால எபிரேயு மொழியை அடிக்கடி குறிப்பிடுவதாக உள்ளது (காண்க யோவான் 19:13, 17, 20). பவுல் எபிரெயு மொழியைக் கற்றிருந்தார், அவரால் அதைப் பேசமுடிந்திருந்தது (காண்க நடபடிகள் 21:40; 22:2; அரமாயிக் என்பது, "பவுலின் நாட்களில் பேசப்பட்ட, எபிரெயத்தில் இருந்த தரவழைக்கப்பட்ட மொழியாக இருந்தது"[4]). இருப்பினும் பவுலின் வார்த்தைகள் இன்னும் அதிகமானவற்றைக் கூறுகின்றன: அவைகள், அவரது குடும்பமானது எருசலேமில் இருந்து வெகுதொலைவில் இருந்த போதிலும், அது இன்னமும் எபிரெயக் கலாச்சாரங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றிற்கு உண்மைநிறைந்ததாக நிலைத்திருந்தது என்று அறிவிக்கின்றன (காண்க நடபடிகள் 21:39; 22:3). பலஸ்தீனத்திற்குப் புறம்பே இருந்த பல யூதர்கள், புறஜாதியாரின் கலாச்சாரங்களையும் நடைமுறைகளையும் தழுவிக்கொண்டனர், ஆனால் பவுலின் பெற்றோர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பவுலின் கூற்றுக்கள், அவர் "ஒரு உண்மையான யூதராக" இருந்தார் என்பதற்கு நிரூபணம் கொடுத்தன. அந்த அப்போஸ்தலர் சடங்காச்சாரத் தூய்மையை ("எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன்"), இனத் தூய்மையை ("இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்") மற்றும் கலாச்சாரத் தூய்மையை ("எபிரெயரில் பிறந்த எபிரெயன்") நிலைநாட்டியிருந்தார்.[5]

## ஒரு புதிய கருத்துநோக்கு

பவுலின் யூதத்துவ வாழ்வு அவருக்கு முக்கியமானதாக இருந்ததா? 7ம் வசனத்தில் அப்போஸ்தலர், இதைத் தமக்கு "இலாபமாக" இருந்தவற்றில் உள்ளடக்கினார். TEV வேதாகமச் சொற்றொடராக்கத்தை பயன்படுத்துவதென்றால், கடந்தகாலத்தில் அவர் தமது மரபுரிமையைத்

*தமது ஆவிக்குரிய கணக்குப் பதிவேட்டில் "இலாபம்" என்ற பகுதியில் வைத்திருந்தார். இருப்பினும் பவுல், இரட்சிப்பிற்குத் தமது யூதச் சாதனைகள் மீது சார்ந்திருந்தாரா? இல்லை, தொடர்ந்து அவர் "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" என்று கூறினார்.*

*சிலர், தாங்கள் சுதந்தரித்துக் கொண்டுள்ளவற்றின் அடிப்படையில் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்ற சிந்தையின் வலைக்குள் விழுகின்றனர்: "எனது பெற்றோர்கள் (அல்லது பெற்றோரின் பெற்றோர்கள்) தங்கள் மதக்குழுவின் அர்ப்பணிப்பு மிக்க உறுப்பினர்களாக இருந்தனர்." அவர்கள் தங்கள் முன்னோர்கள் செய்தவை தங்கள் ஆவிக்குரிய "கணக்கில் வரவு வைக்கப்படும்" என்பது போன்று பேசுகின்றனர். "கிறிஸ்தவ நாடு" என்று அழைக்கப்பட்டுள்ள நாட்டில் பிறந்துள்ளதே தங்களைத் தாமாகவே கிறிஸ்தவராக்கிவிடும் என்று நினைத்துக் கொண்டுள்ள ஒரு சிலரைக் கூட நான் அறிவேன்.*

*எனது ஆவிக்குரிய மரபுரிமைக்காக நான் நன்றிநிறைந்தவனாக இருக்கிறேன். எனது எள்ளுத்தாத்தா ஜான் விட்மைர் என்பவர் டெக்ஸாஸின் ஜான்சன் மாவட்டத்தில் முன்னோடிப்பிரசங்கியாராக இருந்தார். எனது கொள்ளுத் தாத்தா ஜான்ஸன் டாஸன் டேக்கஸ் என்பவர், டெக்ஸாஸின் அர்க்கன்ஸாஸிலும் இந்திய எல்லைப் பகுதியிலும் சுவிசேஷப் பிரசங்கியாராக இருந்தார். "பரிசுத்த வேத எழுத்துக்களை, ... சிறுவயது முதல்" எனக்குப் போதித்த கிறிஸ்தவப் பெற்றோர்களுக்காக நான் தினமும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன் (காண்க 2 தீமோத்தேயு 3:15). இப்படிப்பட்ட ஒரு மரபுரிமை எனது இரட்சிப்பை உத்திரவாதப்படுத்துகிறதா? இல்லை. அந்த மரபுரிமையில் நான் "மகிமைப்பட" ["நம்பிக்கைவைக்க" அல்லது "மேன்மைபாராட்ட"] வேண்டுமா? இல்லை. "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைச் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" (கலாத்தியர் 6:14அ)!*

## *ஒருவர் தமது சாதனைகள் மீது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:5ஆ-7)*

### *பழையதொரு கண்ணோக்கு*

*பவுல் தமது ஆவிக்குரிய மரபுரிமையைப் பட்டியலிட்ட பின்பு, தாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு தமது ஆவிக்குரிய சாதனைகளைக் கணக்கிட்டார். பட்டியலின் இந்த பாகம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்" (வசனம் 5உ). பவுல், யூதமார்க்கத்தின் "மிகவும் கண்டிப்பான பிரிவில்" உறுப்பினராக இருப்பதைத் தேர்ந்துகொண்டார் (நடபடிகள் 26:5). அவர் பரிசேயர்களில் மாபெரும் போதகராக இருந்த கமாலியேல் என்பவரின்கீழ் கல்வி கற்றிருந்தார் (காண்க நடபடிகள் 22:3; 5:34). பவுல் "பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களை" காத்துக் கொள்வதற்குத் தம்மையே அர்ப்பணித்திருந்தார் (கலாத்தியர் 1:14).*

*சுவிசேஷ விபரங்களில் பரிசேயர்களைப் பற்றிய சித்தரிப்பு, பரிசேயராக இருத்தல் என்பது மேன்மைபாராட்டக் கூடியதாக இருந்தது என்று*

கற்பனை செய்யக் கடினமாக இருக்கும் அளவுக்கு, மிகவும் எதிர்மறையாக உள்ளது. இருப்பினும் பரிசேயர்கள் யூதர்களின் மத்தியில் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டனர். மேன்மைப்படுத்தப்பட்ட ஒரு சிறுகுழு என்ற வகையில் அவர்கள், ஆவிகள், தூதர்கள் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றி நியாயப்பிரமாணம் கூறியவற்றை விசுவாசித்தனர் (நடபடிகள் 23:8), அவர்கள் நியாயப்பிரமாணத்தின் போதனைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தனர் (காண்க மத்தேயு 23:23). பவுல், தாம் ஒரு பரிசேயராக இருந்ததாகக் கூறியபோது, அவர் தாம் "ஒரு யூதரில் யூதராக" இருந்ததாகக் கூறினார்.

அடுத்ததாகப் பவுல், *"பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்" என்று கூறினார் (வசனம் 6அ).* (காண்க நடபடிகள் 8:1ஆ, 3; 9:1, 2.) " 'துன்பப்படுத்துதல்' (*diokein* என்ற) வினைச் சொல்லானது, 'ஏதேனும் ஒன்றை ஓடச்செய்தல்,' 'பின்செல்லுதல் அல்லது துரத்துதல்' என்ற தனது அடிப்படைக் கருத்தைக் கொண்டுள்ளது. இது, ஒரு படையானது தனது எதிரியைத் துரத்திச் சென்று, அவர்கள் ஓடும்படி செய்தலை அல்லது ஒரு வேட்டைக்காரர் தமது வேட்டை மிருகத்தைப் பின்தொடர்ந்து சென்று அதை ஓடும்படி செய்தல் என்பதைச் சித்தரிக்கிறது."[6] பவுல் ஒரு பரிசேயராக இருப்பதை ஏன் பட்டியலிட்டார் என்று புரிந்து கொள்வதில் நாம் ஏதேனும் சிரமங்களைக் கொண்டிருந்தால், அவர் மற்றவர்களைத் துன்புறுத்தியதை ஆவிக்குரிய சாதனையாக ஏன் பட்டியலிட்டார் என்பதைப் புரிந்துகொள்வதில் நாம் இருமடங்கு சிரமப்படுவோம். அப்போஸ்தலர், தாம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது எவ்வாறு என்பது குறித்து மேன்மை பாராட்டவில்லை என்பது நிச்சயம். வேறொரு இடத்தில் அவர், "... தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:9). அவரது முந்திய வாழ்வின், தொந்தரவு செய்யும் இந்தப்பகுதி அவரது மனதில் எப்போதுமே இருந்து வந்தது (காண்க நடபடிகள் 22:4, 5; 26:9-11; கலாத்தியர் 1:13; 1 தீமோத்தேயு 1:13).

பவுல் தமது *யூதத்துவ* சாதனைகளைப் பட்டியலிட்டார் என்பதை நினைவில் வையுங்கள். வைராக்கியம் என்பது யூதர்களால் உயர்வாக மதிக்கப்பட்டது (காண்க நடபடிகள் 22:3; ரோமர் 10:2). பழைய ஏற்பாட்டில், பினெகாஸ் என்ற ஆசாரியர், அவரது வைராக்கியத்திற்காகப் பாராட்டப்பட்டார் (காண்க எண்ணாகமம் 25:11-13). தேவனுடைய வீட்டின் மீதான வைராக்கியம் மேசியாவைப் பட்சிக்கும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (சங்கீதம் 69:9; காண்க யோவான் 2:17). பவுல், யூதத்துவம் கிறிஸ்தவத்தால் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டபோது, தாம் அபாயமான வேதப்புரட்டு என்று கருதிய அதை [கிறிஸ்தவத்தை] அழிக்க நாடும்படி, அவரின் சொந்த வைராக்கியம் மிகவும் வலுவாயிற்று (நடபடிகள் 26:9-11). மற்ற யூதர்கள், தாங்கள் எவ்வளவு வைராக்கியமாய் இருந்தனர் என்று *பேசிக்கொண்டு* இருந்திருக்கலாம், ஆனால் பவுல் தமது வைராக்கியத்தைச் *செயல்விளக்கப்படுத்தினார்.*

பவுல் *"நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்"* என்று கூறித் தமது ஆவிக்குரிய சாதனைகளின் பட்டியலை முடித்தார் *(வசனம் 6ஆ).* "நீதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை

(இது *dikaiosune* என்பதன் ஒரு வடிவமாகும்), அடிப்படையில் "சரியாக இருத்தலின் பண்பு" என்று அர்த்தப்படுகிறது.[7] இந்தப் பண்பைப்பற்றி, மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் தொடர்புபடுத்துகையில், பவுல் தாம் "குற்றஞ்சாட்டப்படாதவராக" இருந்ததாகக் கூறினார். சிலர், "ஒரு நிமிடம் பொறுங்கள்! இயேசு கிறிஸ்து ஒருவரே நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தவர் ஆவார்!" என்று கூறி நிச்சயமாக மறுப்புரை தெரிவிப்பார். பவுல், தாம் "குற்றஞ்சாட்டப்படாதவராக" இருந்தார் என்று கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

நாம், 2:15 உடன் தொடர்புடைய வகையில் "குற்றமற்றவர்" என்ற வார்த்தையைப் பற்றிக் கலந்துரையாடினோம். இது மனிதர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது, அவர்கள் "பூரணமானவர்களாக" அல்லது "பாவமற்றவர்களாக" இருக்கின்றனர் என்று அர்த்தப்படுவதில்லை. பவுல், பூரணத்தன்மையையோ அல்லது பாவமற்ற தன்மையையோ உரிமை கோரவில்லை என்பது நிச்சயம் (காண்க 3:12; 1 தீமோத்தேயு 1:15). மாறாக, "குற்றஞ்சாட்டப்படாதவர்" என்ற வார்த்தை, எந்த ஒரு குற்றச் சாட்டும் அவர் மீது ஏற்படுத்தப்பட்டு நிலைநிறுத்தப்படமுடியாது என்பதையே மறைமுகமாக உணர்த்துகிறது. நியாயப்பிரமாணத்தின் புறம்பான நிபந்தனைகளை - மற்றவர்கள் காணக்கூடியவற்றை - பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். அவர் தாம் கடைப்பிடிக்கத் தவறியதாக யூதத்துவச் சட்டம் அல்லது சடங்காச்சாரம் ஏதாவது ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கும்படி அறைகூவல் விடுத்திருந்தார். அவர் வேறொருவரின் வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்க முடியும்: "இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்" (லூக்கா 18:21).

ஒரு யூதர் என்ற வகையில், பவுலின் சாதனைகள் தனிச்சிறப்பானவையாக இருந்தன. கலாத்தியருக்கு அவர், "நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள் ... என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய்" ... என்று கூறினார் (கலாத்தியர் 1:13அ, 14அ). அவரது வாழ்வு பற்றிய விபரங்கள், அவர் ஒரு நடத்துனர் என்ற வகையில் மதிக்கப்பட்டு கண்ணோக்கப்பட்டார் என்று கருத்துத் தெரிவிக்கின்றன (காண்க நடபடிகள் 7:58; 8:1அ; 9:1, 2; 22:5; 26:10). *The Jewish Times* என்று அழைக்கப்பட்ட ஒரு பத்திரிகையை யூதர்கள் வெளியிட்டிருந்தால், அதன் மேல் அட்டையில், பவுலின் படமானது, "இந்த ஆண்டின் மிகவும் வைராக்கியமான மனிதர்" என்ற தலைப்புடன் இருந்திருக்கும்.

## மாறியதொரு கண்ணோக்கு

ஒரு காலத்தில் பவுல், தமது யூதத்துவ சாதனைகளைத் தமது ஆவிக்குரிய கணக்குப் பதிவேட்டில், "இலாப" பக்கத்தில் இட்டிருப்பார் - ஆனால் அவரது மனக் கருத்துநோக்கு மாறியிருந்தது: "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (வசனம் 7). பவுல், "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்று அறிந்திருந்தார் (ரோமர் 3:20அ; காண்க கலாத்தியர் 5:4). கிறிஸ்துவுக்குள்

மாத்திரமே மீட்பு காணப்படுகிறது (காண்க ரோமர் 3:24); நாம் அவருக்குள் "விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்" (கலாத்தியர் 3:24). ஆகவே பவுல் தமது ஆவிக்குரிய முந்திய சாதனைகளைப் பற்றிய தமது கண்ணோக்கை மாற்றிக் கொண்டார்: அவைகள் "இலாபமாக" இருப்பதற்குப் பதிலாக "நஷ்டம்" என்றாயின.

சாதனைகளுக்குப் பரிசளிக்கும் உலகத்தில் நாம் வாழ்கிறோம். வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள், வெகுமதிகள், தகுதிச் சான்றிதழ்கள், பட்டயங்கள், வேலையில் உயர்வுகள்: இவற்றில் பெரும்பான்மையானவை தனிப்பட்ட சாதனைகளின் அடிப்படையில் உள்ளன. நாம் நமது சாதனைகளை விரும்பி, மதித்து, சிலவேளைகளில் அவைகள் கணிசமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்றுகூட ஏங்குகிறோம். எனவே, மதவிஷயத்திற்கு நாம் வரும்போது, நாம் இரட்சிக்கப்படுகிறோமா அல்லது இழந்துபோகப்படுகிறோமா என்பதைத் தனிப்பட்ட சாதனைகள் தீர்மானிக்கும் என்று நினைக்கும்படி சோதிக்கப்படுதல் ஒன்றுள்ளது. ''கிரியைகளினால் அல்ல'' ஆனால் ''விசுவாசத்தினால் மாத்திரமே" இரட்சிப்பு உண்டு என்று உரிமைகோருபவர்களில் சிலர், இந்த சோதிக்கப்படுதலுக்கு ஆட்பட்டிருக்கின்றனர். ஞானஸ்நானத்தின் அவசியம் பற்றிக் கலந்துரையாடுவதில் நான் அடிக்கடி பின்வரும் மறுப்புரையைக் கேள்விப்படுகிறேன்: "எனது தாத்தா இரட்சிக்கப்பட்டிருக்க மாட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லை, ஆனால் *நான் அறிந்திருப்பவர்களிலேயே மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராக அவர் இருந்தார்!*" இப்படிப்பட்ட மறுப்புரையாளர், அவரது முன்னோர், தனிப்பட்ட *சாதனையினிமித்தம்*, நல்ல மனிதர் என்ற அந்தஸ்தை *பெற்றிருப்பதனிமித்தம்* இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். இவ்வாறாக, "விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு" என்று நம்புதலை உரிமை கோருபவர்கள், தங்கள் சொந்த போதனைக்கே முரண்பட்டு நிற்கின்றனர்.

தனிப்பட்ட சாதனையைச் சார்ந்திருத்தலுக்கு எதிராக நான் எச்சரிக்கும்போது, கர்த்தருக்கு நம்மால் முடிந்த எல்லாவற்றையும் நாம் செய்யக்கூடாதென்று நான் கூறுகிறேனா? இல்லை. ஆவிக்குரிய சாதனை நல்லதாகவே உள்ளது. மீட்பிற்கு நாம் சாதனைகளைச் சார்ந்திருக்க இயலாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றே *நான்* கூறுகிறேன். இரட்சிப்பைப் பெறத் தகுதியாவதற்கு எவரொருவர் போதுமானவற்றைச் செய்ய முடியாது. இயேசு, "... நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" என்று கூறினார் (லூக்கா 17:10). மற்றும், மீட்புக்குத் தனிப்பட்ட சாதனையைச் சார்ந்திருத்தல் என்பது இயேசுவின் மரணத்தை மதிப்புக் குலையச் செய்வதாக உள்ளது. ஒரு நபர், நன்மை செய்தால் இரட்சிக்கப்பட முடியும் என்றால், இரு நபர்கள் அவ்வாறு இரட்சிக்கப்பட முடியும்; ஏனெனில், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34). இருவர் இவ்வாறு இரட்சிக்கப்பட முடியும் என்றால், ஒரு நூறுபேர்களும் அவ்வாறே இரட்சிக்கப்பட முடியும். ஒரு நூறுபேர் அவ்வாறு இரட்சிக்கப்பட முடியுமென்றால், எல்லா மனிதர்களும் அவ்வாறே இரட்சிக்கப்பட முடியும் - மற்றும் இயேசு அந்தக் கொடூரமான சிலுவையில் மரித்திருக்கத் தேவையில்லை.

என்ன ஒரு தேவதூஷணமான சிந்தனை!

ஏஜமானருக்குச் செய்யும் ஊழியத்தில் உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்வதில் இருந்து உங்களை நான் ஒருக்காலும் ஊக்கம் இழந்துபோகச் செய்யமாட்டேன். பவுல், "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்போழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:58). நீங்கள் உங்கள் சாதனைகளினால், தேவனை உங்கள் கடன் கணக்கில் வைக்கலாம் என்று சிந்தித்தலில் இருந்து நான் உங்களை ஊக்கம் இழக்கச் *செய்வேன்*. இரக்கம் நிறைந்த மற்றும் கிருபையுள்ள கர்த்தரைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!

## கிறிஸ்துவைத் தவிர வேறு எதையாவது சார்ந்திருத்தல் = நஷ்டம் (3:7, 8)

7ம் வசனத்தைத் திரும்பவும் கண்ணோக்குங்கள்: "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." "எவைகளோ" என்பது, பவுல் தமது தொடக்ககால வாழ்வில் சுதந்தரித்திருந்த மற்றும் சாதித்திருந்த *எல்லா* விஷயங்களைக் குறிக்கிறது. "மனித மார்க்க சாதனை என்ற மலையின் உச்சியில் கோபுரத்தைக் கட்டியிருந்த நிலையில் அவர் ஒரே ஒரு அடியினால் அவை எல்லாவற்றையும் பேரழிவுக்கு உட்படுத்தினார்":[8] அவர் எல்லாவற்றையும், "கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று" எண்ணினார்.

"நஷ்டமென்று எண்ணினேன்" என்ற சொற்றொடர் கிரேக்க மொழியில், ஒருதரம் மட்டும் வருகிற வினைச்சொல்லில் உள்ளது. சட்டப்படி, ஒருதரம் மட்டும் வருகிற வினைச்சொல் கடந்த காலத்தில் *ஒருமுறை மாத்திரம் நடந்த* நிகழ்ச்சியைச் சுட்டிக்காண்பிக்கிறது. பவுல் தமது வாழ்வில், தமஸ்கு செல்லும் சாலையில், கர்த்தரின் தரிசனத்தினால் ஏற்பட்ட தீவிரமான மாற்றத்தைச் சிந்தையில் கொண்டிருந்து இருப்பார் என்பது உறுதி (நடபடிகள் 9:1-19; 22:4-16; 26:9-18). பிரகாசமான வெளிச்சம் அவரது கண்களைப் பார்வையற்றுப் போகச்செய்தது, ஆனால், அவரது புரிந்துகொள்ளுதலுக்கு ஒளியூட்டியது. அவரது வாழ்வு தலைகீழாகத் திருப்பப்பட்டது "இருள்" வெளிச்சமாயிற்று; "பொல்லாங்கு" நல்லதாயிற்று; "தவறு" சத்தியமாயிற்று!

### கிறிஸ்துவைத் தவிர வேறு எதையாவது

பவுல் தமது இலாபங்கள் மற்றும் நஷ்டங்களை மறுமதிப்பீடு செய்ததில், கிறிஸ்துவுடன் தமது முதல் சந்திப்போடு அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. தொடர்ந்து அவர், *"அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 8)*. இவ்வசனத்தில் அப்போஸ்தலர், கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச்சொல்லை பயன்படுத்தினார், இது நிகழ்காலத்தில் *தொடர்ந்து நடைபெறும்* செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. நஷ்டம் என்று எண்ணுதல், அவரது மனமாற்றத்தின்

போது செய்யப்பட்ட முடிவாக மாத்திரம் இருக்கவில்லை; அது ஒரு அன்றாட முடிவாக இருந்தது. இயேசுவோடு ஒப்பிடுகையில், பவுலுக்கு வேறு எதுவும் மதிப்புடையதாக இருக்கவில்லை. அவர் தமது கர்த்தராகிய "கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக" ஏதொன்றையும் மற்றும் எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க மனவிருப்பம் கொண்டிருந்தார்.

தொடர்ந்து பவுல், *"அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்"* என்று கூறினார் *(வசனம் 11அ)*. அப்போஸ்தலர், யூத அமைப்பின் படிநிலையில், தமது பதவியை இழந்தார். அவர் தமது சகமக்கள் மத்தியில் நல்லநிலையில் இருத்தலை இழந்தார். அவரது நண்பர்கள் அவருக்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பிக் காண்பித்தனர். சந்தேகமின்றி அவர் தமது குடும்பத்தில் பலருக்கு அந்நியரானார். ஒரே இரவில் அவர், யூதர்கள் மத்தியில் மிகவும் நேசிக்கப்பட்டவர் என்ற நிலையில் இருந்து மிகவும் வெறுக்கப்பட்டவர் என்ற நிலைக்கு வந்தார். அவர் பாதுகாப்பாக இருத்தலைக் கைவிட்டார், மற்றும் கடைசியில் அவர் தமது உயிரை இழந்துபோவார். அவர், இயேசுவுக்காக இவை எல்லாவற்றையும் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார்.

பவுலின் அடுத்த வார்த்தைகள் [இது தமிழ் வேதாகமத்தில் 11ம் வசனமாக உள்ளது] யூதத்துவ நபருக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்திருக்கும். (அவைகள் தொடக்கால வாசகர்கள் சிலருக்கு கூட அதிர்ச்சியூட்டுவதாக இருந்திருக்கும்.[9]) அவர் தாம் கலந்துரையாடியிருந்த எல்லாவற்றையும் குறித்து, *"நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு ... குப்பையுமாக எண்ணுகிறேன்"* என்று கூறினார் (வசனங்கள் 9அ, 11ஆ). "குப்பை" என்று தரவழைக்கப்பட்டுள்ள (*skubala* என்ற) வார்த்தை, மொழிபெயர்க்கக் கடினமான வார்த்தையாக உள்ளது. இது நாய்களுக்குத் தூக்கியெறியப்படும் துணுக்குகளை, வெறுக்கத்தக்க குப்பைக் குவியலை அல்லது மனித மற்றும் மிருகக் கழிவுகளைக் கூட அர்த்தப்படுத்தக்கூடும். "Filth" என்ற ஆங்கில வார்த்தை, இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தப் பரப்பெல்லையை விளக்க நெருக்கமாக வரலாம். இவ்வார்த்தை எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், இது வெறுப்பூட்டுவதாக உள்ளது!

பவுல் தமது முந்திய வாழ்வைப் பற்றி (அல்லது கிறிஸ்துவிலிருந்து வழிவிலக்கிச் செல்லும் எந்த விஷயத்தைப் பற்றியாவது) நினைத்தபோது, அவர் அதை மதிப்பற்றது என்று எண்ணியதோடு நின்று விடவில்லை; அதை அவர் ஒரு கடன் சுமை போன்று நினைத்தார். வேறுவார்த்தைகளில் சொல்லுவது என்றால், அவர் அதை மதிப்பெதுவும் கொண்டிராதது என்று நினைத்தது மட்டுமின்றி, அதன்மீது அவர் *வெறுப்படைந்தார்* மற்றும் அதினால் அவர் *எதிர்த்து விலக்கப்பட்டார்.* நான் ஒரு பண்ணைச் சூழலில் வளர்ந்ததால் பின்வரும் விவரிப்பு எனது சிந்தைக்கு வருகிறது; ஒரு பெண் பிள்ளை தனது அழகிய புதிய காலணிகளைப் பெருமையுடன் காண்பிக்கிறாள். பின்பு அவள் அந்தக் காலணிகளை அணிந்தவளாக சேறும் அழுக்கான சாணியும் நிறைந்த இடத்தைக் கடந்து நடந்து வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறாள். அவளது பதில்செய்கையை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அவ்வாறே பவுலும், இயேசுவின் மீது கவனம் குவிப்பதை விடுத்து வேறொரு இடத்தில் கவனம் குவிக்கக் கூடிய வகையில், மனிதர்களின் கண்களைக் கவரக்கூடிய எந்த விஷயத்தைப் பற்றியும் உணர்ந்தார்.

### கிறிஸ்துவையன்றி வேறொன்றுமில்லை

பவுல், இயேசுவைப் பின்பற்றுவது என்ற தமது முடிவைக் குறித்து வருந்தினாரா? குப்பையைத் தூக்கியெறிந்த பின்பு அதைத் திரும்பவும் தனது வீட்டில் கொண்டிருக்க விரும்பும் மனப்போக்குடைய மனிதரைக் காட்டிலும் அதிகமாக அவர் வருத்தப்படவில்லை! பவுல், "விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு" அதை வாங்குவதற்காக "போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று" விட்ட வியாபாரியைப் போல் இருந்தார் (மத்தேயு 13:45, 46). அவர் அதிகமாக விட்டுக் கொடுத்திருந்தார், ஆனால் புதையல்களை பெறுவதற்குக் குப்பையை யார்தான் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்?

பவுலின் வார்த்தைகளில் இருந்து நாம் ஏற்படுத்தக் கூடிய நடைமுறைப்பயன்பாடு என்ன? உங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் நடுவே ஏதாவதொரு விஷயம் வருமென்றால் - அது எந்த விஷயமாக இருந்தாலும், அதை விட்டு விலகிவிடுங்கள். என்னைத் தவறாகப் புரிந்துகொள்வதைத் தவிர்ப்பதற்காக நான், பரிவிரக்கமற்ற ஒரு திருமணத் துணைவரை விட்டுச் சென்றுவிடுங்கள் என்று குறிப்பிடவில்லை என நான் கூறியாக வேண்டும். திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானது (மத்தேயு 19:1-9). அவிசுவாசியுடன் வாழுதல் என்பது கடினமானதாக இருக்கக் கூடும், ஆனால் அது ஒருவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஒன்றையும் அளிக்கிறது (காண்க 1 பேதுரு 3:1, 2). இருப்பினும் மற்ற பகுதிகளில், இந்த அடிப்படை சத்தியம் உண்மையாக நிலைக்கிறது: ஒரு விஷயமானது தன்னிலே நல்லதாக இருக்கலாம்; ஆனால் அது உங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவாக வரும் என்றால், அதைவிட்டு விலகிவிடுங்கள். அது மதிப்பற்றதாக உள்ளது. இல்லை, அது இரட்சகருடன் ஒரு நெருக்கமான உறவு கொண்டிராதபடி உங்களை விலக்கும் என்றால், அது மதிப்பற்றதைக் காட்டிலும் மிக *மோசமானதாக* உள்ளது! அதை, "புயலில் மூழ்கிவிடும் என்ற நிலையில் உள்ள ஒரு கப்பலைக் காப்பதற்காக அதில் உள்ள மதிப்பு மிக்க சரக்குப்பெட்டியை ஒருவர் வெளியே எறிந்து விடுவதைப் போன்று" உடனடியாகத் தூக்கியெறிந்து விடுங்கள்.[10]

## கிறிஸ்துவின் மீது சார்ந்திருத்தல் = இலாபம் (3:9-11)

பவுலின் இலாப - மற்றும் - நஷ்ட கணக்கில் நாம், "நஷ்டம்" என்ற அம்சத்தின் மீது இதுவரை கவனம் குவித்திருந்தோம். இப்போது "இலாபம்" என்ற பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காண்பிக்க வேளை வந்துள்ளது.

### கிறிஸ்துவை அறிதல்

8ம் வசனத்தில் பவுல், "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார். கிறிஸ்துவை "அறிதல்" என்பதன் மீதான வலியுறுத்தமானது 10ம் வசனத்தில் திரும்பவும் கூறப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது: "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி."

பவுல், கிறிஸ்துவை "அறிதல்" பற்றிப் பேசியபோது, அவர் கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளுதலை மாத்திரம் - அது முக்கியமானதே

என்றாலும் (ரோமர் 10:17) அதை மாத்திரம் அவர் - தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. "அறிதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (ginosko என்ற வார்த்தையின் ஒரு வடிவம்) சொற்றொடர், உறவு வார்த்தையாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது: "[புதிய ஏற்பாட்டில்] ginosko என்பது அடிக்கடி, அறிகிற நபர் மற்றும் அறியப்படும் பொருள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவைச் சுட்டிக்காண்பிக்கிறது."[11]

ஏவுதல் பெற்ற வார்த்தையில் கிறிஸ்துவைப்பற்றி நாம் வாசிக்கும்போது, அவரைப்பற்றி "அறிதல்" தொடங்குகிறது (யோவான் 20:30, 31). அடுத்ததாக, மனம் வருந்திய விசுவாசிகள் என்ற வகையில், நாம் "*கிறிஸ்துவுக்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறோம்" (கலாத்தியர் 3:27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு அவருடன் நாம் "நடக்கையில்" (காண்க ரோமர் 6:4; கொலோசெயர் 2:6) மற்றும் அவரோடு "ஐக்கியம்" கொண்டிருக்கையில் (காண்க 1 கொரிந்தியர் 1:9; 1 யோவான் 5:20), நாம் அவரைப் பற்றி இன்னம் அதிகம் அதிகமாக "அறிந்து" கொள்கிறோம்: அவருடனான நமது உறவு இன்னும் நெருக்கமாகவும் இன்னும் தனிப்பட்டதாகவும் வளருகிறது. வில்பர் ஃபீல்ட்ஸ் என்பவர் இந்த அற்புதமான "அறிவை," "விரிவானது, பயன்நிறைந்தது, களிப்பூட்டுவது, திருப்திப்படுத்துவது, ஆழ்ந்தறிவுள்ளது, அதிகாரத்துவமானது, மேலேற்றுவது, தூய்மையாக்குவது, உதவிநிறைந்தது [மற்றும்] மறுரூபமாக்குவது!" என்று விவரித்தார்.[12] "தனிப்பட்ட வகையில் நம்பிக்கை வைத்தலின் நெருக்கத்தில், அவரை அறிதல் மற்றும் அர்ப்பணித்தல் என்பது அவரது இரட்சிக்கும் பயன்களை அறிதல் என்பதாகவே உள்ளது."[13]

நாம் இந்த வாழ்வில் இயேசுவை ஒருக்காலும் முழுமையாக "அறிய" முடியாது. அதனால்தான் பவுல், 9 மற்றும் 10ம் வசனங்களில் தமது கவனத்தை, மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதல் என்ற கருத்தின் மீது திருப்பினார் 1 யோவான் 3:2ம் வசனம், "... அவர் வெளிப்படும்போது ... [கடைசியாக] அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் ... என்று கூறுகிறது."

## கிறிஸ்துவுக்குள் காணப்படுதல்

*பவுல் கிறிஸ்துவை "அறிதலோடு" நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை; அவர் "அவருக்குள் காணப்பட" விரும்பினார் (வசனம் 9ஈ)* அவர் கிறிஸ்துவை "தமது நிரந்தரமான முகவரி" ஆக்கிக் கொள்ள விரும்பினார். அவர் "கிறிஸ்துவின் இயல்பு, ஊழியம், ஐக்கியம் மற்றும் பிரசன்னம் ஆகியவற்றிற்குள் முழுமையாக ஈடுபாடு கொண்டிருக்க விரும்பினார்."[14]

இந்த இலக்குகளைப் பவுல், தமது சொந்த முயற்சிகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள முடிந்ததா? இல்லை. தொடர்ந்து அவர், *"... நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து" என்று கூறினார் (வசனம் 9ஆ).* "நீதி" என்ற வார்த்தை இவ்வசனத்தில் இருமுறை காணப்படுகிறது, இது "தேவனுடைய பார்வையில் நீதியானவராக எண்ணப்பட்டிருத்தல்" என்பதைக் குறிக்கிறது.

பவுல், "நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல்" என்று கூறியபோது, அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிப்

பேசினார். கலாத்தியர் 2:16 வசனப்பகுதியில் அவர் கூறியுள்ளபடி, “நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை.” விருத்தசேதனமும் நியாயப்பிரமாணத்தின் மற்ற கிரியைகளும் நீதியைத் கொண்டுவர முடியாது மற்றும் கொண்டுவரமாட்டாது. இருப்பினும் நாம், இன்னும் அதிகமான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். பின்வரும் வார்த்தைகளை உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: “எனது சுயநீதியை உடையவனாயிராமல்.”

தேவனுக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வேதாகமம் போதிக்கிறது (காண்க யோவான் 14:15; 1 யோவான் 5:2, 3). சர்வவல்லவரின் சில கட்டளைகளை “சிறியவை” அல்லது “முக்கியத்துவம் அற்றவை” என்று சிலர் கருதினாலும், நாம் அவரது ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படியப்பிரயாசப்படவேண்டும் (காண்க மத்தேயு 5:19). இதை நான் என் முழு இருதயத்தோடும் நம்புகிறேன், மற்றும் இதை நான் என் முழுபெலத்தோடும் போதிக்கிறேன். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்காவிட்டால், நாம் இரட்சிக்கப்பட முடியாது (காண்க மத்தேயு 7:21; எபிரெயர் 5:8, 9). அதேவேளையில், கட்டளைகளைக் கடைப்பிடித்தல் பற்றி வலியுறுத்துதலில் ஒரு அபாயம் உள்ளதை நான் உணர்ந்து அறிந்திருக்கிறேன்: நமது கிரியைகளின் அடிப்படையில் நாம் இரட்சிக்கப்படுவோம் என்று நினைத்தலின் அபாயம், “நமது சுய நீதியை” நிலைநாட்ட முயற்சி செய்யும் அபாயம். மெலோன் என்பவர், “இரட்சிப்பு என்பது முயற்சியினால் அடையப்படுவதல்ல, ஆனால் அது ஈடுசெய்வதால் கிடைக்கப் பெறுவதாக உள்ளது! அது சாதித்ததினால் அல்ல அனால் இயேசுவைக் கீழ்ப்படிதலுடன் விசுவாசிப்பதால் உண்டாகிறது” என்று எழுதினார்.[15]

இதையே பவுல் போதித்திருந்தார்: “... சுயநீதியை உடையவனாயிராமல், *கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால்* வருகிறதும் *விசுவாசமூலமாய்* தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து ...” (3:9; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த விசுவாசம் “கிறிஸ்துவைப் பற்றிய முன்மொழிதல்களின் வரிசையொன்றிற்கு மதிநுட்பமான ஒப்புதல் என்பதாக இருப்பதில்லை, ஆனால் கிறிஸ்துவின் மீது தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் அவருக்குச் சுயத்தை அர்ப்பணித்தல் ஆகியவற்றின் செயல்பாடாக உள்ளது.”[16] இது ஜீவனுள்ள விசுவாசமாக, செயல்படுகிற விசுவாசமாக, கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக உள்ளது (காண்க யாக்கோபு 2:26; கலாத்தியர் 5:6; எபிரெயர் 11:8) - இது எஜமானரின் சித்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்தலாக உள்ளது. இந்த நம்பிக்கையுள்ள கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் கிறிஸ்துவுக்குள் நமது ஞானஸ்நானமும் (தண்ணீரில் அமிழ்த்துதல்) அடங்கியுள்ளது (கலாத்தியர் 3:26, 27). இருந்த போதிலும் இது, நாம் இயேசுவுக்காக என்ன செய்கிறோம் என்ற விசுவாசமாக இன்றி, இயேசு நமக்காக என்ன செய்கிறார் என்பதிலான விசுவாசமாக நிலைத்திருக்கிறது. இது சுய வாழ்த்துதலுக்கு எந்த ஒரு இடத்தையும் விட்டு வைப்பதில்லை.

ஒரு சுவிசேஷ ஊழியக்காரர், “faith” என்ற ஆங்கில வார்த்தைக்கு உள்ளூர் மொழியில் மொழிபெயர்ப்பு வார்த்தை ஒன்றைக் கண்டறியப் போராடிக் கொண்டிருந்தார்.[17] ஒருநாள், தேவையில் இருந்த ஒரு மனிதரால் இடைமறிக்கப்படும் வரையிலும், ஏற்புடைய வார்த்தையொன்றை கண்டறிய அவர் தவறியிருந்தார். அந்த மனிதர், “நான் வந்து *கனமாக* உங்கள் மீது *சாய்ந்து*

*கொள்ளட்டுமா?"* என்று கேட்டார். கிறிஸ்துவை "விசுவாசித்தல்" என்பது அவர்மீது "கனமாகச் சாய்ந்து" கொள்ளுதலாக - அவரை, அவரைமாத்திரமே சார்த்திருத்தலாக உள்ளது. நாம் அவரை "அறிய" வேண்டுமென்றால், நாம் "அவருக்குள் இருப்பதாகக் காணப்பட" வேண்டுமென்றால், இதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## முடிவுரை

நமது வேதபாட வசனப் பகுதியின், 9 மற்றும் 10ம் வசனங்களில், பவுல் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை மற்றும் அவருடைய பாடுகளின் ஐக்கியம் உட்பட, கர்த்தரைப் பற்றிய *எல்லாவற்றையும்* தாம் அறிந்து கொள்ள விரும்பியதாக உரைத்தார் (வசனம் 10). இவ்வசனங்களைப் பற்றி ஒரு விபரமான படிப்பை நமது அடுத்த பாடத்திற்காக நாம் விட்டு வைப்போம்.

நமக்கு உண்மையிலேயே முக்கியமானதாக உள்ளது எது? பவுலுக்கு முக்கியமானதாக இருந்தது எது [அல்லது யார்] என்பது தெளிவாக உள்ளது: இயேசு மற்றும் இயேசு மட்டுமே. இலாபம் மற்றும் நஷ்டம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்த அப்போஸ்தலர், கர்த்தரைத் தவிர எல்லாவற்றையும் "நஷ்டம்" என்று கண்ணோக்கினார். கர்த்தரை அறிதல் என்பதே அவரது ஒரே "இலாபமாக" இருந்தது. உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்த்த பின்பு, உங்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் ஏதேனும் நிற்பதாக நீங்கள் கண்டறிந்தால், நீங்கள் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, பவுல் செய்தது போன்றே அதை "குப்பையாக" எண்ணுங்கள். உங்கள் வாழ்வை - இன்றே - அவருக்கு அர்ப்பணியுங்கள்!

---

குறிப்புகள்

[1]P. Bonnard; quoted in Ralph P. Martin, *The Epistle of Paul to the Philippians,* rev. ed., Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 144. [2]J. A. Bengel; quoted in Martin, 145. [3]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 132-33. [4]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 117. [5]Ibid. [6]Hawthorne, 134. [7]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 970. [8]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 78. [9]Hawthorne, 139. [10]Ibid., 136.

[11]Vine, 628. [12]Wilbur Fields, *Philippians-Colossians-Philemon,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1969), 78. [13]Martin, 151. [14]Fields, 79. [15]Malone, 79. [16]Hawthorne, 141. [17]இந்த விவரிப்பு, Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy*, The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 159 என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது.